பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 20 புதன்கிழமை 04.07.2022 கதிர் 133

## IMF பேச்சுகள் சாதக நிலை!

### எனினும் 2024 வரை பணம் அச்சிட வேண்டி வரும் என்கிறார் பிரதமர்

பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகள் சாதகமான நிலையை அடைந்துள்ளன எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2

# இன்று நாடாளுமன்றம் வந்தார் ஜனாதிபதி; ‘கோ ஹோம் கோட்டா’ கோஷத்தால் பரபரப்பு

## 10 நிமிடங்களுக்குச் சபை அமர்வு ஒத்திவைப்பு








தனக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்ததை அடுத்து நீண்ட நாள்களாக வெளியே தலைகாட்டாமல் இருந்து வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடிய நிலையில், 10.05 மணியளவில் ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்தார்.

இதன்போது நாட்டின் பொருளாதார 2

## சகல கட்சிகளையும் அரவணைத்து ஆட்சியமைப்பேன்

### ரணிலுக்கு அநுர பதிலடி



அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சியமைக்கத் தயார் என்று கடந்த மே மாதம் நான் தெரிவித்தேன். அந்த நிலைப்பாட்டில் நான் இப்போதும் உறுதியாகவுள்ளேன். ஆனால், நான் அன்று கூறிய பெரும்பாலான விடயங்களில் 2

# மக்களை மேலும் வதைக்காமல் கோட்டா உடன் விலக வேண்டும்

## பேராயர் பகிரங்கக் கோரிக்கை

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களை மேலும் வதைக்காமல் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.** 2





## பதவி விலக நான் தயார்

### அநுரவுக்கு ரணில் சவால்

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய உரிய வேலைத் திட்டத்தை எந்தக் கட்சியாவது முன்வைத்தால் பிரதமர் பதவியில் இருந்து விலக நான் எந்நேரமும் தயார். 2

## வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 8 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி - வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த 8 பேர் அகதிகளாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

3 ஆண்கள், 2 பெண்கள், 2 சிறுவர்கள் மற்றும் ஒரு சிறுமி உட்பட 8 பேர் வல்வெட்டித்துறையில் இருந்து படகு மூலம் தமிழகம் - தனுஷ்கோடிப் பகுதிக்குச் சென்ற வேளை இராமேஸ்வரம் கடலோரப் பாதுகாப்புப் படையினர் இவர்களை மீட்டு 2

## ரணில் - சஜித் வாக்குவாதம்



நாடாளுமன்றத்தில் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தி சபையில் உரையாற்றிய நிலையில், அதனைத் 2

## காணாமல்போயிருந்த குடும்பப் பெண் ஆற்றங்கரையிலிருந்துசடலமாக மீட்பு!



காணாமல்போன நிலையில், தேடப்பட்டு வந்த குடும்பப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டவளை, அகரவத்தைத் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் முதல் காணாமல்போயிருந்த பெண்ணே அகரவத்தை தோட்ட ஆற்றங்கரையிலிருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

54 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான பி.விஜயலெச்சுமி 2

## எரிபொருள் வரிசையில் மற்றுமொரு உயிரிழப்பு

நாட்டில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த நிலையில் உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்ந்து வரும் நிலையில் இன்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொரளையில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

60 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந் நிலையில். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இன்று நாடாளுமன்றம் வந்தார் ஜனாதிபதி; .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலைமை மற்றும் அது தொடர்பான வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெளிவு படுத்தி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், எதிரணியினர் தமது ஆசனங்களிலிருந்து திடீரென எழும்பி 'கோ ஹோம் கோட்டா' என ஜனாதிபதிக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியும் சபைக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், பிரதமரின் உரை முடிவடைந்ததும் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்குச் சபாநாயகர் ஒத்திவைத்தார்.

ஜனாதிபதியை நீண்ட நாள்களாக வெளியில் காணவில்லை என்றும், அவர் எங்கே இருக்கின்றார்? அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா? என் பதையாவது அரசு கூற வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. நளின் பண்டார, நாடாளுமன்றில் நேற்று அரசிடம் கோரியிருந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விகளின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே நளின் பண்டார எம்.பி. இவ்வாறு கோரியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து அமர்வில் கலந்துகொண்டார்.

## வல்வெட்டித்துறையைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இலங்கையில் இருந்து கடந்த மார்ச் மாதம் முதல் இன்று வரையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

## பதவி விலக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது கட்சிக்கு ஆட்சி வழங்கப்படும் பட்சத்தில், 6 மாத காலத்தில் நாட்டை வழமைக்குக் கொண்டு வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார். அப்படிச் செய்தால் அவருக்கு நோபல் பரிசை வழங்கவும் முடியும்.

எனவே, அவ்வாறான திட்டம் இருந்தால் அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு அநுரகுமாரவைக் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் நாடாளுமன்றத்திலாவது முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அநுரகுமார திஸாநாயக்கவினால் வழங்கப்படும் திட்டம் சாதகமாக இருக்கும் பட்சத்தில் அவருக்காகப் பிரதமர் பதவியை வழங்க நான் தயாராக இருக்கின்றேன் - என்றார்.

## ரணில் - சஜித் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் வேலைகளைச் செய்ய முடியாத பிரதமரே ரணில் விக்கிரமசிங்க என்று குறிப்பிட்டார்.

அத்துடன், மாற்று அரசான எதிர்க்கட்சிக்கு ஆட்சியை ஒப்படைக்குமாறு கோருவதாகவும் கூறினார்.

இந்நிலையில், பிரதமர் பதிலளிக்கும்போது, எதிர்க்கட்சியினரிடம் முறையான வேலைத்திட்டங்கள் இல்லை என்றும், இருந்தால் முன்வைக்க வேண்டும் என்றும் கூறினார். அத்துடன் தன்னிடம் படித்தவர்களுக்கு ஆட்சியை எப்படிப் பிடிப்பது என்றும் தெரியவில்லை என்றும் ரணில் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட சஜித், ரணிலிடம் நாங்கள் படிக்கவில்லை. எனது தந்தையே அவருக்கு அரசியல் கற்பித்துள்ளார். நாங்கள் எப்படி அரசியல் படித்து ரணிலைப் பூஜ்ஜியத்துக்குக் கொண்டு வந்தோம் என்று அவருக்குத் தெரியும் - என்றார்.

## காணாமல்போயிருந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் ஹற்றன் நீதிவான் பார்வையிட்ட பின்னர், பிரேத பரிசோதனைக்காக வட்டவளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## IMF பேச்சுகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றில் இன்று தெரிவித்தார்.

சபையில் விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த அவர், 2023ஆம் ஆண்டு, நாடு பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் எனவும் எச்சரித்தார்.

2023ஆம் ஆண்டு பல சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடுகளுடன் பணத்தை அச்சிட வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்ட அவர், 2024ஆம் ஆண்டு இறுதிக்குள், பணம் அச்சிடுவதை முற்றிலுமாக நிறுத்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கம் எனவும் கூறினார்.

இந்தநிலையில், பொருளாதார மீளமைப்புக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருந்து நடத்தப்பட்ட பேச்சுகளாக இருந்தன.

எனினும், தற்போது வங்குரோத்து நாடாக இருந்து பேச்சு நடத்தப்படுகின்றது. இந்தநிலையில் கடன் மீளமைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை என்பவற்றை சர்வதேச நாணய நிதியத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இதையடுத்தே சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் திட்டத்துக்குச் செல்லமுடியும்.

நமது தற்போதைய பொருளாதார வளர்ச்சி விகிதம் எதிர்மறை நான்கு மற்றும் எதிர்மறை ஐந்து இடையே உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் புள்ளிவிவரங்களின்படி, எதிர்மறை ஆறு மற்றும் எதிர்மறை ஏழு இடையே உள்ளது. இது ஒரு தீவிரமான நிலை. இந்தச் சாலை வரைபடத்தில் உறுதியான பயணத்தை மேற்கொண்டால், 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் முதன்மையான பிரச்சினை எரிபொருள் நெருக்கடி. அதே சமயம், உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் மற்றும் உணவு விடயத்தில், நம் நாடு ஒரு கட்டத்தில் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எரிபொருள் பற்றாக்குறையாக இருந்தது. உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தது.

சமீபகால உலக நெருக்கடிகளால் இந்நிலை மேலும் தீவிரமடைந்து நாங்கள் அடுப்பில் விழுந்தோம். உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக, எங்கள் பிரச்சினை இன்னும் மோசமாகிவிட்டது. இப்போது நடந்திருப்பது நமது நெருக்கடியின் மேல் ஒரு சர்வதேச நெருக்கடியைச் சேர்த்ததுதான். இந்த நிலை நமக்கு மட்டும் அல்ல. இது மற்ற நாடுகளையும் பாதிக்கின்றது. இந்த உலகளாவிய நெருக்கடியால் இந்தியாவும் இந்தோனேசியாவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்கள் எங்களுக்கு வழங்கிய கடன் உதவியை இந்தியா மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. - என்றார்.

## சகல கட்சிகளையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு பகுதியை மாத்திரம் எடுத்துக் கொண்டு என்னையும், எனது கட்சியையும் அவமதிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகின்றார்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. சபையில் இன்று குற்றஞ்சாட்டினார்.

6 மாதங்களில் அநுரகுமார எம்.பி. நாட்டை வழமைக்குக் கொண்டுவரவுள்ளார் என்று தெரிவித்தார் எனவும், அவ்வாறு செயற்பட முடியுமானால் பிரதமர் பதவியிலிருந்து தான் விலகத் தயார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றில் ஆற்றிய உரைக்குப் பதில் வழங்கும் வகையில் சபையில் உரையாற்றும்போது அநுரகுமார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அநுரகுமார எம்.பி.,

6 மாதங்களில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதாகவே நான் தெரிவித்தேன். நாடு இவ்வாறு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நிலையில், தற்போதைய அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

நம்பிக்கையில்லாத எந்தவொரு அரசாலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஜனாதிபதி ஒருவரை எதிர்க்கட்சிக்கு அல்லாமல் வீட்டுக்கு அனுப்பும் நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையில் சுமார் 8.5 பில்லியன் டொலர் இடைவெளி காணப்படும்போது இதை 6 மாதங்களில் சீரமைக்க முடியாது.

இந்த நெருக்கடி நிலைமையானது கடந்த 42 வருடங்களாகக் காணப்படுகின்றது. பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க பதவி விலகினாலும், என்னைப் பிரதமராக நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை. அவ்வாறு அதிகாரம் இருந்தாலும் என்னைப் பிரதமராக ஜனாதிபதி நியமிப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்த நெருக்கடியில் இருந்து நாம் நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால், குறுகிய காலத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை சமநிலைக்குக் கொண்டுவந்து, அதன் பின்னர் பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்வதன் ஊடாக மக்களின் நம்பிக்கையை வென்றவர்கள் ஆட்சியமைக்க முடியும். நிலையான அரசொன்றை உருவாக்க முடியும் - என்றார்.

## மக்களை மேலும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நெருக்கடியான நிலையில் இருந்து இந்த நாட்டை விடுவிப்பதற்கு மிகப் பெரிய தடையாக இருப்பது ராஜபக்ஷ குடும்பத்தினரே. எனவே, பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையை அவர்கள் இழந்துள்ளதால் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவித்த பேராயர் மேலும் கூறுகையில்,

பதவியில் உள்ள ராஜபக்ஷக்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இனியும் பதவியில் நீடிக்க அவர்களுக்குத் தார்மீக உரிமை இல்லை.

மக்களுக்கு மேலும் துன்பத்தை ஏற்படுத்தாமல் ஆட்சி அதிகாரத்தை அவர்கள் ஒப்படைக்க வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இராணுவத் திமிர்த்தனம்

இவ்வளவு துரதிஷ்டமான அனுபவங்களுக்கு பின்னரும் இலங்கை இராணுவம் திருந்தவே போவதில்லை என்பதை அது மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றது.

இராணுவம் புரியும் அட்டூழியங்களை மூடி மறைத்து, பொறுப்பு கூறலைத் தட்டிக் கழித்து, எதேச்சாதிகார மாக செயல்படுவதே தனது ஒரே இலக்கு என்பதை குருநாகல் சம்பவத்திலும் அது உறுதிப்படுத்திக் காட்டியி ருக்கின்றது. யக்கஹபிட்டிய பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு சிவிலியனை சில இராணுவத்தினர் பிடித்து வருகின்றனர். தூரத்தில் இருந்து அவர்களை நோக்கி விரைந்து வந்த ஆஜானு பாகு தோற்றம் கொண்ட லெப்டினன்ட் கேர்ணல் தர அதிகாரி ஒருவர் வந்த வேகத்திலேயே கராத்தே வீரர் போல காலை உயர்த்தி அந்தச் சிவிலியனின் தலையை நோக்கி உதையும் காட்சி சந்தர்ப்பவசமாக மற்றொரு சிவிலியனால் காணொலியாகக் காட்சிப் பதிவு செய்யப்பட்டு விட்டது. அது சமூக ஊடகங்களில் வைரலாக பரவி, உண்மை அம்பலமானதும் இலங்கை இராணுவம் தனது கைவரிசையை – வழமையான பண்பியல்பை – தான் மக்களின் இராணுவம் அல்ல, எதேச்சாதிகாரத்தின் கருவி மட்டுமே என்ற நடத்தை கோலத்தை – வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

இலங்கை இராணுவ அதிகாரத்தின் பண்பியல்பே இப்படித் திமிர்த்தனமாக வெறியோடு நடந்து கொண்டு, வெளியில் மனிதாபிமான வேடம் போடுவதுதான்.

இதில் இரண்டு விடயங்கள். ஒன்று – அந்த இராணுவ அதிகாரியின் செயற்பாடு. மற்றையது – அதை ஒட்டி இலங்கை இராணுவ தலைமை நடந்து கொண்ட சின்னத்தனப் போக்கு.

முதலாவது – விடயம் தனி மனித நடத்தை. இலங்கை இராணுவத்தில் இருக்கும் சாதாரண சிப்பாயிலிருந்து இராணுவத் தளபதி வரை ஒவ்வொருவரின் பண்பியல் கோலம் யாது என்பது இலங்கை மக்களுக்கு அப்பட்டமா கத் தெரியும். அதுவும், தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் என்று மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத, மிருகத்தனமான நடத்தைக ளுக்கான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் இலங்கை இராணுவம், அதற்கான சுயாதீனமான – சர்வதேச நியமங்களுக்கு அமைவான – நியாயமான – விசாரணைகளுக்கு மறுத்து நிற்பதற்கும் காரணங்கள் வெளிப்படையானது. அத்தகைய கொடூரங்களை இழைத்த இராணுவஅங்கத்தினர்களின்திமிர்த்தனமனநிலையில்தான் இந்த அதிகாரியும் உள்ளார். அவ்வளவுதான்.

இந்தச் சம்பவம் வீடியோ ஆதாரமாகப் படம் பிடிக்கப் படாவிட்டால் – அது சமூக ஊடகத் தளங்களில் அம்பல மாகி இருக்காவிட்டால் – அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று வழமை போல வாய் கூசாது 'உண்மை' பேசி இருக்கும் இலங்கை இராணுவம். 'சனல் –4' இன் கொடூர ஆதாரங்களை அடியோடு நிராகரித்த மகத்தான இராணுவம் அல்லவா இலங்கைப் படை ?

அந்த வீடியோவை எடுத்த சமூக ஆர்வலர் உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கின்றார். அதுவும் இலங்கை இராணுவத்தின் பரவணிப் பண்பியல்பின் வழமையான வெளிப்பாடுதான்.

அதைவிட முக்கியமானது இந்த சமயத்தை சம்ப வத்தை ஒட்டி இலங்கை இராணுவம் வெளியிட்ட அறிவிப்பு.

குடிபோதையில் இருந்த சிவிலியனின் நடத்தைகளை விமர்சிக்காத சமூக ஊடகங்கள், இராணுவ அதிகாரிகளின் நடவடிக்கையை ஏளனம் செய்தன என அது குறை கூறியிருப்பது அதிர்ச்சி தரும் கூற்று.

அந்த சிவிலியன் குடிபோதையில் இருந்தமை உண்மை என்றால், சட்ட ரீதியாகக் கூட அவரின் செயற்பாடுகளுக்கு ஒரு காப்பு உண்டு. குடிபோதையில் இருந்தவரை இப்படி வந்த வரத்தில் காலை தூக்கித் தாக்கும் அந்த அதி காரியின் எதேச்சாதிகாரப் போதை எப்படியானது? அதைப் பற்றி தான் முதலில் இராணுவத் தலைமை சிந்திக்க வேண்டும் – இத்தகைய வழமையான இட்டுக்கட்டு அறிக்கையை வெளியிட முன்னர்.

தாம் உதைத்தது அந்த சிவிலியனின் உடலில் பட வில்லை என்று இப்போது சப்புக்கட்டு கட்டுகின்றார் அந்த இராணுவ அதிகாரி. குறைந்தது காணொலியில் இருக்கும் காட்சியை – தாம் எட்டி உதைந்தார் என்ற உண்மையை – அவர் ஒப்புக் கொள்வது நல்ல ஆரம்பம்தான்.

# பொதுமக்கள் சார்ந்துள்ள விடயங்களில் இராணுவ அதிகாரிகள் தலையிடக்கூடாது

## அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்து



இராணுவ அதிகாரியொருவர் குடிமகன் ஒருவரைக் காலால் மார்பில் எட்டி உதைத் ததைப்போன்று குடிமகன் ஒருவன் இராணுவ அதிகாரியொருவரை காலால் எட்டி உதைந் தால் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கொள்கை எவ்வாறு செயற்படும்? என்று கேள்வி எழுப்பியிருக்கும் இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணை யாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், பொதுமக்கள் சார்ந்த விவகாரங்களில் இராணுவத்தினர் தலையிடக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இராணுவ அதிகாரியொருவர் அவரது காலால் இளைஞர் ஒருவரின் மார்பில் எட்டி உதைக்கும் காட்சி அடங்கிய காணொலி பேஸ்புக், டுவிட்டர், வட்ஸப் உள்ளிட்ட சமூக வலைத்தளப் பக்கங்களில் அதிகமாகப் பகிரப்பட்டதுடன், அதுதொடர்பாகப் பல்வேறு தரப்பினரும் தமது கோபத்தையும் அதிருப்தி யையும் விமர்சனங்களையும் வெளி யிட்டனர்.

அந்தவகையில் இந்தச் சம்பவம் குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் தலைவருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப் பவை வருமாறு –

இவர் இராணுவ அதிகாரியா? அல்லது இராணுவ குண்டரா? ஒரு குடிமகன் ஓர் இராணுவ அதிகாரியை நோக்கி இத்தகைய செயலைச் செய்தால், அந்தக் குடிமகனின் நிலையென்ன? அதன்போது 'ஒரே நாடு–, ஒரே சட்டம்' என்ற கொள்கை எவ்வாறு தொழிற் படும்? பொதுமக்கள் சார்ந்த விவகாரங்களில் இராணுவத்தினர் தலையிடக்கூடாது. சட்டத்தை நிலைநாட்டுவதில் அவர்கள் தலை யிடக்கூடாது. மாறாக அவர்கள் இராணுவத்தி னருக்குரிய கட்டடத்திலேயே இருக்க வேண் டும். – என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையின் முன்னேற்றத்துக்கு ஆதரவு

## ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியிடம் உறுதி!

*இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கடல்சார் துறைகளின் முன்னேற்றத்துக்கு ஆதரவளிப்பேன் என ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி தெரிவித்துள்ளார்.*

*கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினையை ஆஸ்ரேலியா நன்கு உணர்ந்துள்ளது.*

*ஒரு நாட்டினால் வழங்கப்பட்ட மிக அதிகமான மனிதாபிமான உதவித் தொகையாக 5 கோடி டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டன. இது வெறும் ஆரம்பம்தான். ஏனைய துறைகளிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும். - என ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தெரி வித்துள்ளார்.*

*மேலும் கடல்சார் மற்றும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், ஆஸ்திரேலிய முதலீட்டை ஊக்குவிப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இரு நாடுகளுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இலங்கையுடன் ஆஸ்திரேலியாவின் நெருக்க மான ஒத்துழைப்பைப் பாராட்டினார்.*

# ஹற்றனில் எரிபொருள் வரிசையில் முறுகல் நிலை ஏற்பட்டது!

ஹற்றன் ஐ.ஓ.சி. பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காகவரிசையில்நின்றவர்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

ஒருசிலர்தங்களுக்குநெருங்கியவர்களை வரிசையின் இடையில் புகுத்துவதற்கு முற் பட்டதன் காரணமாகவும், ஒரு சிலர் வரிசை யில் வராது பெற்றோல் பெற்றுக்கொள்ள முற்பட்டதன் காரணமாகவும் இந்த முறுகல் நிலை ஏற்பட்டது.

ஹற்றன் நகரிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு, ஒரு வாரத்துக்குப் பின்னர். நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை இரண்டு மணியளவில் பெற்றோல் பவுஸர் வந்தது. அதிலிருந்து இறக்கப்பட்ட எரி பொருளே, விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஹற்றன் நகரில் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்தி ருந்தன.

பெற்றோல் நிரப்புவதற்கு கடந்த இரண்டு, மூன்று நாள்கள் காத்திருப்பவர்களுடன் நேற்று கேள்வியுற்ற பலர் எரிபொருள் பெற்றுக்கொள்ள வருகை தந்தமையால் ஹற்றன் பிரதான வீதி, ஹற்றன் சுற்றுவட்ட வீதி, டன்பார் வீதி, உள்ளிட்ட பல வீதிகளில் வாகன நெரிசல் நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சுதந்திர தினத்தன்று சோகம்


# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு 6 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

அமெரிக்காவின் சுதந்திர தினமான நேற்று அதன் கொண்டாட்ட பேரணியின் போது மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 24 பேருக்கு உடலில் தோட்டாக்கள் பாய்ந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த அதிர்ச்சி கரமான சம்பவம் சிகாகோ நகரில் தெற்கு புற நகர்பகுதியில் அமைந்து இருக்கும் ஹைலேண்ட் பார்க் என்ற இடத்தில் நடந்துள்ளது. சுதந்திர தினத்தை கொண்டாடும் விதமாக அங்குள்ள தெரு ஒன்றில் ஆண்கள், பெண்கள் பேண்டு வாத்தியங்களுடன் பேரணி சென்று கொண்டு இருந்தனர். பேரணி தொடங்கிய 10வது நிமிடத்தில் ஒரு கட்டடத்தின் மேற்கூரையில் நின்று இருந்த ஒரு மர்ம நபர் திடீரென்று துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்.

இதில் 6 பேர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டு பலர் நாலாபக்கமும் தெறித்து ஓடினர். அப்போதும் அந்த நபர் தொடர்ந்து சுட்டுக் கொண்டே இருந்தார். இதில் மேலும் 24 பேரின் உடலில் குண்டுகள் பாய்ந்தன. துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் தீவிரவாதியா என்ற கோணத் தில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஒருபுறம் துப்பாக்கிச் கலாச்சாரத்தை ஒடுக்க அமெரிக்கா முயன்று வரும் வேளையில், மறுபுறத்தில் இது போன்ற ஈவு இரக்கமற்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றமை அந் நாட்டு மக் களை கலக்கத்திற்கு உள்ளாக்கியுள் ளது. கடந்த மே மாதம் டெக்சாஸ் மாகாணத்தில் பள்ளி ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியர்கள் உட்பட 19 குழந்தைகள் கொல் லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## வாடிகனில் பரபரப்பு போப் ராஜினாமா?



போப் பிரான்சிஸ் விரை வில் ராஜினாமா செய்ய வுள்ளார் என செய்திகள் வெளியான நிலையில் அவர் இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளார். இது தொடர் பாக நேற்று பேட்டி அளித்த போப் பிரான்சிஸ், "முன்கூட் டியே ஓய்வு பெறும் திட்டம் எதுவும் இல்லை. முட்டியில் வலி, தசைநார் வீக்கமாக இருந்தபோது சிறிய எலும்பு முறிவு ஏற்பட்டது. அதன் காரணமாக ஒரு மாதமாக சக்கர நாற்காலியை பயன் படுத்தி வருகின்றேன். தற்போது சிகிச்சையின் மூல மாக மெதுவாக குணம டைந்து வருகிறேன். விரைவில் ரஷ்யா மற்றும் உக்ரைன் செல்லவும் தீர்மா னித்துள்ளேன்" என் றார்.

## போரில் பாதிப்படைந்துள்ள உக்ரைனை சீரமைக்க 750 பில்லியன் டொலர் தேவை என்கிறார் அதிபர்



உக்ரைன் மீது ரஷ்ய படைகள் கடந்த பெப்ரவரி மாதம் 24ம் திகதி தொடங்கிய தாக்கு தல் தற்போது வரை நீடித்து வருகிறது. இந்தப் போரில் இரு நாடுகளின் தரப்பி லும் அதிக அளவில் உயிர்சேதம் ஏற்பட் டுள்ளது. உக்ரை னில் இருந்து லட்சக் கணக்கான மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து, அண்டை நாடுகளில் அகதி களாக தஞ்சம் அடைந்துள் ளனர். இதற்கிடையே, போரில் உருக்குலைந்துள்ள உக்ரைன் நாட்டிற்கு உதவுதற்காக சர்வ தேச நாடுகள் உறுதியளித் துள்ளன. இந்த ஆண்டிற்கான (2022) உக்ரைன் மீட்பு மாநாடு சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. இந்நிலையில், உக்ரைன் மீட்பு மாநாட்டில் அதிபர் ஜெலன்ஸ்கி காணொலி வாயிலாக பங் கேற்றார். அப்போது பேசிய அவர், ரஷ்யா உடனான போரில் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனை புனரமைக்க 750 பில்லியன் டொலர் தேவை என தெரிவித்தார். இந்த நிதியை ஜனநாயகத்தின் மீது நம்பிக் கையுள்ள நாடுகள் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.



## ஆல்ப்ஸ் மலையில் பனிப்பாறைகள் சரிவு ஆறு பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

ஆல்ப்ஸ் மலையில்பனிப்பாறைகள் சரிந்து வீழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், ஐரோப்பியாவில் மிகப் பெரிய மலை தொடராக ஆல்ப்ஸ் மலை தொடர் விளங்குகிறது. இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட 8 நாடுகளில் இந்த மலை தொடர் பரந்து விரிந்து காணப்படுகிறது. இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் மலை ஏற்ற பயிற்சி மற்றும் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுவது வழக்கம். அதேபோல இந்த மலை தொடரில் அமைந்துள்ள மர்ம லாடா சிகரத்தில் நேற்று பலர் மலை ஏற்ற பயிற்சியில் ஈடுபட்டனர். சிலர் பனிச்சறுக்கு விளையாடினர். அப்போது திடீரென யாரும் எதிர் பாராத வகையில் சிகரத்தின் உச்சியில் இருந்து பனிப்பாறைகள் அப்படியே சரிந்து விழுந்தன.

இதில் மலை ஏறிக் கொண்டு இருந்தவர்கள் பனிப்பாறை சரிவில் சிக்கி அடித்து செல்லப்பட்டனர். 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். 8 பேர் படுகாயம் அடைந்தனர். இதுபற்றி அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஹெலிக்கொப்டர் மூலம் அவர்கள் பனிப்பாறைக்குள் மாட்டி கொண்டவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதில் 5 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. பனிப்பாறைகள் சரிவில் இன்னும் எத்தனை பேர் சிக்கி உள்ளனர் என்ற விவரம் தெரியவில்லை. அவர்களை தேடி கண்டுபிடிக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது.

## பர்கினோ பாசோவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பேர் சாவு

ஆபிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடு பர்கினோ பாசோ. அந்நாட்டில் கடந்த 2015ம் ஆண்டு முதல் போகோஹரம், ஐ.எஸ். அல் கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த பயங்கரவாத குழுக்களை ஒழிக்க ராணுவமும் பொலிஸாரும் தீவிர முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றனர்.



இதனால் பயங்கரவாதி களுக்கும் பாதுகாப்புப் படை யினருக்கும் இடையே அவ் வப்போது மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், பர்கினோ பாசோவின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கி ஏந் திய நபர்கள் வந்து இறங்கினர். அவர்கள் கண் இமைக்கும் நேரத்தில் காட்டுமிராண்டித் தன மாக அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

இதில் அங்கிருந்த அனை வரும் அலறியவாறு ஓட்டம் பிடித்தனர். இந்த தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர் என தகவல்கள் வெளியாகின. அங்கு பாதுகாப்பு படையினர் குவிக் கப்பட்டு விசாரணை நடத்தப் படுகிறது.

## பூமியை சுற்றிய செயற்கைகோள் நிலவை நோக்கி பயணம்

அமெரிக்க விண்வெளி கழகமான நாசா, ரொக்கெட் லேட் மற் றும் அட்வான்ஸ்ட் ஸ்பேஸ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து கேப்ஸ்டோன் செயற்கைகோளை ஏவியது. நியூசிலாந்தின் மகியா தீபகற்பத்தில் சிறிய எலெக்ட்ரான் ரொக்கெட்டில் 25 கிலோ எடை கொண்ட செயற்கைகோள் கடந்த 6 நாள்களுக்கு முன்பு விண்ணில் ஏவப்பட்டது. பூமியின் சுற்று வட்ட பாதையை அடைந்த செயற்கை கோள் அதிலிருந்து விலகி வெற்றிகரமாக நிலவை நோக்கி தனது பயணத்தை தொடங்கியது. இந்த செயற்கைகோள் நிலவை அடைய 4 மாதங்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ரொக்கெட் லேப் நிறுவனர் பீட்டர் பெக் கூறும்போது, மீத முள்ள பணிகள் வெற்றிகரமாக இருந்தால் கேப்ஸ்டோன் செயற் கைகோள், நிலவை சுற்றி ஒரு புதிய சுற்றுப் பாதையில் முதன் முதலில் செல்லும். பல தகவல்களை பல மாதங்களுக்கு அனுப்பும் என்றார். இந்த செயற்கைகோள் குறைந்த செலவில் அனுப்பப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கேட்வே என்ற விண்வெளி நிலை யத்தை சுற்றுப்பாதையில் அமைக்க நாசா திட்டமிட்டுள்ளது. அதில் இருந்து விண்வெளி வீரர்கள், ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதி யாக நிலவின் மேற்பரப்பில் இறங்கு திட்டம் வகுத்துள்ளது. புதிய சுற் றுப்பாதை மூலம் எரிபொருள் பயன்பாடு குறைகிறது. மேலும் செயற் கைகோள் அல்லது விண்வெளி நிலையம் பூமியுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க முடியம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# இலங்கையின் அத்துமீறலைக் கண்டிக்க வேண்டும்! மத்திய அரசுக்கு டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்



இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் மீண்டும் கைதுசெய்யப்படுகின்றமை குறித்து பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டிருக் கிறார்.

வங்கக்கடலில் கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் ஐந்து பேரை சிங்களக் கடற்படையினர் அத்துமீறிக் கைது செய்துள்ளனர். அவர்கள் இலங்கை எல்லைக்குள் நுழைந்ததனர் எனக் கூறி காங்கேசன் துறைமுக சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது. காரைக்காலில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டமையால் ஏற்பட்ட அதிர்ச்சி விலகும் முன்பே அடுத்த கைதுப் படலமும், அத்துமீறலும் நடந்திருக்கிறது. தமிழக மீனவர்கள் மீதான சிங்களக் கடற்படையினரின் தொடர் அத்துமீறலை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது.

மீனவர்களை கைது செய்ததற்காக இலங்கை அரசுக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும். இனி கைது கூடாது!, என்று இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்!, என்று தனது அறிக்கையில் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

## இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மத்திய அரசுக்கு அண்ணாமலை கடிதம்



இலங்கையில்கைதுசெய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 12 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ற கோரிக்கையை முன்வைத்து இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் கே.அண்ணாமலை கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கடந்த 8 ஆண்டுகளில் கைதுசெய்யப்பட்ட 2,977 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு தமிழக பா.ஜ.க. சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாம் திகதி இலங்கைக் கடற்படையினரால் தமிழகத்தைச் சேர்ந்த 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், என்று தனது கடிதத்தில் அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

## சிவசேனாவை ஒழிக்க பா.ஜ.க. சதி! உத்தவ் தாக்கரே குற்றச்சாட்டு



மகாராஷ்டிர சட்டசபையில் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான மாநில அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ள நிலையில் சிவசேனா கட்சியின் தலைவரும் அம்மாநில முன்னாள் முதல்வருமான உத்தவ் தாக்கரே, பா.ஜ.க. மீது கடும் குற்றச்சாட்டினை முன்வைத்திருக்கிறார்.

சிவசேனா பவனில் நடைபெற்ற அக்கட்சியின் மாவட்டத் தலைவர்கள் கூட்டத்தில் உரையாற்றிய உத்தவ் தாக்கரே, சட்டசபையைத் தன்னிச்சையாக நடத்துவது அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் செயலாகும். சிவசேனா கட்சியை முடிவுக்குக் கொண்டு வர பா.ஜ.க. சதி செய்கிறது. இந்த விளையாட்டுகளை எல்லாம் விளையாடுவதற்கு பதிலாக, அவர்களுக்கு தைரியம் இருந்தால் மாநிலத்தில் இடைக்காலத் தேர்தலை நடத்த வேண்டும். நாங்கள் மக்கள் நீதிமன்றத்திற்கு செல்வோம். நாங்கள் தவறு செய்தால், மாநில மக்கள் எங்களை வீட்டிற்கு அனுப்புங்கள், நீங்கள் (ஷிண்டே குழுவினர் ) தவறாக இருந்தால், மக்கள் உங்களை வீட்டிற்கு அனுப்புவார்கள் மாநிலத்தில் நடைபெற்ற அரசியல் நகர்வுகள் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டதா அல்லது அரசியலமைப்பு விதிமுறைகள் மீறப்பட்டனவா என்பது குறித்து நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

## 1,100 ஆண்டுகளுக்கு முந்தைய சமணப் பள்ளி தடயக் கல்வெட்டுகள் புல்லூரில் கண்டுபிடிப்பு



விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக் கோட்டைக்கு அருகேயுள்ள காரியாபட்டி புல்லூர் கிராமத்தில் பழமையான இடிந்த கோவில் ஒன்று இருப்பதாக கிடைத்த தகவலின்படி, பாண்டிய நாடு பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த வரலாற்று ஆர்வலர் அருண் சந்திரன் நேரில் சென்று ஆய்வு செய்துள்ளார்.

அந்த ஆய்வில் 1,100 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொத்தம் ஒன்பது துண்டுக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. குறித்த கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்து மற்றும் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இரண்டு அரசர்களின் பெயர்கள் இந்தக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. முற்கால பாண்டிய மன்னன் மாறன் சடையனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், இராஜராஜ சோழன் இக்கோவிலுக்கு கொடுத்த நிவந்தம் பற்றிய கல்வெட்டும் அடையாளம்காணப்பட்டுள்ளன.

புல்லூரின்பழையபெயர்திருப் புல்லூர் என்பது இந்தக்கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிந்துள்ளதாகவும், இந்த இடத்தில் ஒரு சமணப் பள்ளி செயல்பட்டு வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது. இக்கோவிலின் பெயர் திருப்புல்லூர் பெரும்பள்ளி என்றும், உள்ளிருக்கும் இறைவன் அருகர் பட்டாளகர் என்ற பெயர் கொண்டவரென்றும் அறிய முடிந்துள்ளது.

பாண்டிய நாட்டில் சமண மதம் மிகச் சிறப்பான நிலையில் இருந்ததற்கு இச்சமணப் பள்ளியும் ஒரு சிறந்த உதாரணமாகுமென பாண்டிய நாட்டுப் பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த வரலாற்று ஆர்வலர் அருண் சந்திரன் தெரிவித்துள்ளார்.



## பஞ்சாப் பாடகரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு கொண்டாடிய காணொலி பொலிஸாரிடம் சிக்கியது!

பஞ்சாபிப் பாடகரும் காங்கிரஸ் கட்சியின் பிரமுகருமான சித்து மூஸ்வாலா, கடந்த மே 29 ஆம் திகதி தனது காரில் சென்று கொண்டிருந்த போது லாரன்ஸ் பிஸ் னோய் என்ற தேடப்படும் குற்றவாளியின் கூட்டாளிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். பஞ்சாபில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக லாரன்ஸ் பிஸ்னோய் மற்றும் கோல்டி ப்ரார் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு பேரை டெல்லி பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் அன்கித் சிர்சா மற்றும் சச்சின் பிவானி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். தேடப்படும் குற்றவாளிகளான இருவரும் லாரன்ஸ் பிஸ்னோய், சச்சின் பிவானி ஆகியோரின் கும்பலைச் சேர்ந்தவர்கள் என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைப்பேசிகளைப் பறிமுதல் செய்த பொலிஸார் அவற்றைச் சோதனை செய்தபோது, பாடகர் சித்து மூஸ்வாலாவைச் சுட்டுக் கொன்றுவிட்டு காரில் செல்லும்போது துப்பாக்கிகளைக் காட்டி கொலையாளிகள் கொண்டாடிய காணொலி இருந்துள்ளது. அந்தக் காணொலியில், அங்கித் சிர்சா, சச்சின் பிவானி மற்றும் தீபக் உள்ளிட்ட ஐவர் தங்கள் கைகளில் உள்ள துப்பாக்கியை கைப்பேசியின் கமராவை நோக்கிக் காண்பித்துச் சிரிப்பதும் பதிவாகியுள்ளதாக டெல்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிண்ணியா தள வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை வைத்தியர் இல்லை

## ஒரு வருடமாக நோயாளர் மூதூர்,திருமலைக்கு அலைச்சல்

(ஹஸ்பர்)

கிண்ணியா தள வைத்தியசாலை பல்வேறு பௌதீக வளக் குறைபாடு வைத்தியர் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் பற்றாக்குறைவுடன் இயங்கி வருகின்றது. இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த சத்திர சிகிச்சை வைத்தியர் கடந்த வருடம் ஜூலை 21 ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து எவ்வித பதிலும் இன்றி உயர் கல்விக்காக விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளார். அன்றிலிருந்து இற்றை வரைக்கும் சுமார் ஒரு வருட காலமாக சத்திர சிகிச்சை வைத்தியர் நியமிக்கப்படாமை மிகப் பெரிய கவலையளிக்கும் செயலாகும் என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.நசுருதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனை ஒரு புறக்கணிப்பாகக் கூடப் பார்ப்பதற்கு வாய்ப்பு உள்ளது. சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவரை நியமித்துத் தருகிறோம் என உரிய அதிகாரிகள் பல முறை வாக்குறுதி அளித்தும் கால இழுத்தடிப்பு செய்யப்பட்டே வந்துள்ளது. காலடியில் சிகிச்சை பெற்று வந்த கிண்ணியா மக்கள் இன்று சத்திர சிகிச்சைக்காக 15 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மூதூர் வைத்தியசாலை, 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள திருகோணமலை பொது வைத்தியசாலைகளுக்கு பல ஆயிரம் ரூபா செலவழித்து செல்ல வேண்டிய ஒரு அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தற்போது எமது நாடும் நாட்டு மக்களும் முகம் கொடுத்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு, எரிபொருள் தட்டுப்பாடு இவற்றுக்கு மத்தியில் கிண்ணியாவில் இருந்து திருகோணமலை மூதூர் வைத்தியசாலைகளுக்கும் சத்திர சிகிச்சைக்காக சென்று வருவது என்பது மிகப் பெரிய சவாலாக மாறி உள்ளது. போக்குவரத்துச் சீராக இடம்பெறாமை, வாடகைக்கு வாகனங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத இந்நிலையில் நோயாளிகள் உரிய நேரத்துக்கு சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைக்கு முகம் கொடுப்பதோடு மேலும் அவர்களது நோய் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

மாதாந்தம் சத்திரசிகிச்சை கிளினிக் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை கிண்ணியா வைத்திய சாலையில் கடமையாற்றும் ஏனைய வைத்தியர்களால் வழங்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது

தற்போது மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் கொண்டு இனிமேலும் தாமதிக்காமல் கால இழுத்தடிப்புகளை செய்யாமல் மக்களின் நலனுக்காக உடனடியாக ஒரு சத்திர சிகிச்சை வைத்தியரை நியமிப்பதற்கு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், ஆளுநர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் சார்பாக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கேட்டுக்கொள்கின்றேன்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்முனை மாநகர நிர்வாகத்துக்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு முஸ்தீபு

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் திட்டவட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக எதிர்வரும் 07 ஆம் திகதி அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தத் தீர்மானித்து உள்ளது. கல்முனை மாநகர சபை நிர்வாகத்தால் ஊழியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற கெடுபிடிகளை ஆட்சேபித்து போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்து உள்ளனர் என்று இத்தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஊடகங்களுக்குத் திங்கட்கிழமை தெரிவித்தார்.



ஊழியர்கள் மீதான கெடுபிடிகளைத் தீர்த்து வைக்க மூன்று நாள்கள் அவகாசம் வழங்கி உள்ளனர் என்றும் உரிய தீர்வு கிடைக்க தவறுகின்ற பட்சத்தில் போராட்டம் நிச்சயம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உயர் பீடம் கல்முனையில் உள்ள தலைமையகத்தில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது என்றும் தெரிவித்த அவர் இதில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் அறிய தந்தார்.

அதனடிப்படையில் அத்தியாவசிய சேவைகள் வழங்குனர்களாக ஊடகவியலாளர்கள், நீர் வழங்கல் வடிகால் சபையினர் ஆகியோரையும் பிரகடனப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும், உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த அந்த பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பதவி காலம் முடிவடைந்த பின்னரும் மேலும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டு உள்ளதால் பொதுமக்களின் பல கோடி ரூபா வரி பணம் விரயம் செய்யப்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக இச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

# ஓந்தாச்சிமடம் வட பத்திரகாளி ஆலயத்தில் தீ மிதிப்பு வைபவம்

(காரைதீவு நிருபர் சகா)

ஓந்தாச்சிமடம் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சக்தி விழாவின் தீமிதிப்பு வைபவம் நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கிறது

இவ்உற்சவம் கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கதவுதிறத்தலுடன் ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக எட்டு தினங்கள் பூசைகள் இடம்பெற்று வந்தன. நாளை புதன்கிழமை காலை தீமிதிப்பு சடங்கு நடைபெறவிருக்கிறது.

கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இரவு ஆறு மணிக்கு அம்பாள் எழுந்தருளச்செய்யும் நிகழ்வு இடம்பெற்று இரவு பத்தரை மணி அளவிலே அம்பாளின் தேவஸ்தான திருக்கதவு திறக்கும் நிகழ்வு இடம்பெற்றது

ஏழு நாள்களும் காலை 7 மணிக்கு காலை பூஜை நண்பகல் பூசை 12 மணிக்கும் இரவு பூசை 5 மணிக்கும் இடம்பெற்றுவந்தது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீர கம்பம் வெட்டு நிகழ்வும், வாழைக்காய் எழுந்தருளச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது. இன்று 4ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாள் முத்து சப்பறத்தில் வீதி வலம் வர இருக்கிறார்.

ஐந்தாம் நோர்ப்பு நெல் குற்றும் நிகழ்வு இடம்பெற்று, சக்தி பூஜையும் இடம்பெற்று தீ மூட்டுதல் நிகழ்வும் இடம்பெறும்.

நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு தீமிதிப்புச் சடங்கு இடம்பெறும். அதைத்தொடர்ந்து வாழி பாடும் நிகழ்வும் இடம்பெறும் .

சடங்கு பூஜை யாவும் ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு அருட் கலைத்திலகம் விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.சற்குணராஜா உதயன் குருக்கள் தலைமையில் இடம்பெறுகின்றது.

தீமிதிப்பு வைபவம் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் என்று ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தானம், ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ முருகன் ஆலயங்களின் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றார்கள்.

# மஹ்மூத் லெப்பை ஆலிம் பூங்காவிற்கு அடிக்கல் நடும் நிகழ்வு காத்தான்குடியில்





நூருல் ஹுதா உமர்

காத்தான்குடி நகரசபையினால் ஆற்றங்கரையில் அமைக்கப்படவுள்ள மஹ்மூத் லெப்பை ஆலிம் பூங்காவிற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.எம். அஸ்பர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ், கௌரவ அதிதியாக காத்தான்குடி நகர பிரதி நகரமுதல்வர் எம்.ஐ.எம்.ஜெஸீம் ஆகியோர் கலந்துகொண்டார்.

மேலும் உறுப்பினர்களான ஏ.எம்.எம். ரஊப், கலாநிதி எம்.எல். எம்.சல்மா அமீர் ஹம்ஸா, ஏ.எல். தீன் பைரூஸ், எம்.எம்.எம். ஆரிப் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்கள், உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் கடற்கரையில் நேற்று கரை ஒதுங்கிய சடலம்

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள உமரி கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமாரி பிரதேசத்தைச் சேர்ந்த பெரியதம்பி சற்குணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உமரி பகுதி கடற்கரையில் உயிரிழந்த நிலையில், திங்கள் இரவு 6.30 மணியளவில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளதை கண்டுள்ள பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு















# வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலய வீதியை மறித்த இராணுவம் பரந்தன் – முல்லைத்தீவு வீதியை மறித்து மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று (திங்கட்கிழமை) மாலை 5.30 மணி அளவில் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுப்பதற்காக முல்லைதீவு பெருங்கடலை நோக்கி அடியவர்கள் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்துக்குத் தீர்த்தம் எடுப்பதற்கு செல்கின்ற தீர்த்தக்கரை செல்லும் இராணுவத்தினர் வீதியை மறித்து பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இதுவரை காலமும் தீர்த்தமெடுப்பதற்கு அனுமதி வழங்கிய இராணுவத்தினர் இம்முறை தீர்த்தம்எடுப்பதைத்தடைசெய்துள்ளனர்.

மேற்படி வீதி ஊடாக இராணுவத்தினர் தீர்த்தம் எடுக்க செல்ல விடாததன் காரணமாக நேற்று மாலை அந்தப் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

கடந்த ஆண்டு கொரோனா காலப் பகுதியில் இராணுவத்தினர் இந்த வீதியூடாக செல்ல விடாத நிலையில் மாற்று வீதி ஒன்றின் ஊடாக சென்று கடற்கரையில் தீர்த்தம் எடுத்து வந்திருந்த நிலைமையில் அந்த வழமைக்கு மாறான செயற்பாடு காரணமாக அந்த பகுதியிலே பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டு அந்தக் கிராமத்துக்கு அது ஒரு துக்க நிகழ்வாகப் பதிவாகிய நிலைமையில் அவ்வாறு செல்ல முடியாது என இம்முறை மேற்படி வீதியூடாகவே செல்ல வேண்டும் எனவும் தங்களுடைய சம்பிரதாயத்தை மாற்ற முடியாது எனத் தெரிவித்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் இராணுவ முகாமுடன் ஆலய நிர்வாகத்தினர் கலந்துரையாடியதோடு மூன்று நாள்களுக்கு முன்பதாக எழுத்து மூலமாக ஆவணம் ஒன்றையும் வழங்கி உள்ளனர்.

இருப்பினும் இராணுவத்தின் உயர் பீடங்கள் இந்தப் பாதையால் சென்று தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்து இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் தீர்த்தம் எடுக்க சென்றவர்களை இராணுவ முகாம் வாயிலில் வீதிக்கு குறுக்காகத் தடையை ஏற்படுத்தி உள்ளே செல்ல விடாது தடுத்திருந்தனர்.

இதன்போது அங்கு சென்றவர்கள் பல்வேறு வகையிலும் அவர்களிடம் கோரிய போதும் அவர்கள் எந்த விதத்திலும் அனுமதிக்காத நிலையில் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே அந்த விதிமுறைகளை மாற்றி ஏற்பட்ட விபரீதங்கள் காரணமாக இம்முறை அவ்வாறு செல்ல முடியாது எனவும் தங்களைச் செல்லவிடுமாறு பல மணி நேரமாக கூறியபோதும் 9.30 மணி வரை அவர்கள் அதற்கு சம்மதிக்காத நிலையிலே மீண்டும் இம்முறையும் மாற்று பாதை ஒன்றினூடாக தீர்த்தமெடுக்கும் அணியினர் சென்ற அதே வேளையில் அந்த இடத்தில் ஒன்றுகூடி இருந்த ஏனைய மக்கள் முல்லைத்தீவு பரந்தன் பிரதான வீதியில் வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை அபகரித்து வீதித் தடை ஏற்படுத்தியிருந்த இடத்துக்கு வருகை தந்து இராணுவத்தினரை ஆலய கடமைகளுக்கு ஒத்துழைக்காத காரணத்தால் ஆலய காணியில் இருந்து வெளியேறுமாறு மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் வீதியில் இறங்கி போராட முற்பட்ட வேளையிலே சுமார் 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதம் தாங்கிய நிலையில் குறிப்பிட்ட பகுதிக்கு கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட இடத்திலே சில மணி நேரமாகப் பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன் பின்னணியில் தங்களுடைய ஆலய கடமைக்கு ஒத்துழைக்காத இராணுவம் ஆலய காணியில் இருந்து வெளியேற வேண்டும் என்ற மக்களுடைய தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து மேற்படி பகுதியில் இருந்த மக்களினுடைய காணியில் இருந்து இராணுவத்தினர் தங்களுடைய பொருள்களை அகற்றி அந்த இடத்திலிருந்து வெளியேறுவதாக உறுதி அளித்து உடனடியாக இரவோடு இரவாக இடத்திலிருந்து பொருள்களை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

அந்த இடம் இராணுவத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் உடனடியாகவே மக்கள் அந்த இடத்தை எல்லைப்படுத்தி அதனை வேலியடைகின்ற நிலையில் தற்போது ஈடுபட்டுள்ளதோடு மேற்படி காணி சப்த கன்னிமார் ஆலயத்துக்குரிய காணி என பெயர் பலகை ஒன்றையும் நாட்டியுள்ளனர் .இதே வேளை, தீர்த்தமெடுக்க செல்கின்ற வீதியில் இராணுவத்தினர் தங்களுடைய இராணுவ முகாம் வீதியென பெயரிடப்பட்டதால் அந்தப் பெயரை மாற்றுவதற்கும் முற்பட்டிருக்கின்றனர். தொடர்ச்சியாக அந்த இடத்திலேயே தற்போதும் 200க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருக்கின்றதோடு இந்த இராணுவத்தினர் அந்த இடத்திலிருந்து முற்று முழுதாக அகல வேண்டும் எனக் கோரி மக்கள் அந்த இடத்திலேயே தற்போது வரை இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத் தாக்குதல் தொடர்பாக மக்கள் அச்சப்படவேண்டாம்!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

சமூக வலைதளங்களில் தற்போது பரவி வரும் தீவிரவாத தாக்குதலின் உளவுத்துறை தகவல் தொடர்பாகப் பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

2022 ஜூன் 27 ஆம் திகதி, பாதுகாப்புச் செயலாளரான கமால் குணரட்னவுக்கு பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன விசேட கடிதமொன்றை அனுப்பியுள்ளார். 29 ஆம் திகதி பாதுகாப்புச் செயலகத்துக்கு இந்தக் கடிதம் கிடைத்துள்ளது.

இந்தக் கடிதத்தில் ஜூலை மாதம் 5 (இன்று) மற்றும் நாளை 6 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ள கரும்–புலிகள் தினத்தை இலக்கு வைத்து, வெளிநாட்டு புலனாய்வு அமைப் பொன்று வடக்கில் அல்லது தெற்கில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புலனாய்வு ஆதாரங்கள் மூலம் பெறப்பட்ட உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை சரிபார்க்கப்படாத புலனாய்வுத் தகவல்கள் என்றும் கறுப்பு ஜூலையை இலக்குவைத்து இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்வதற்கு எந்த அடிப்படைத் தகவலும் இல்லை என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதக் குழுக்களால் இத்தகைய தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் அரசாங்கத்துக்கு எதிரான குழுக்கள் அரசாங்கத்தை இழிவுபடுத்துவதற்கும் ஸ்திரமின்மைக்கு உள்ளாக்குவதற்கும் வன்முறையைத் தூண்டலாம் என்றும் அமைச்சகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுவதால், பெறப்பட்ட உளவுத்துறை எச்சரிக்கை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில், உயர்தர பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே, பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் அன்றாடப் பணிகளைத் தொடருமாறும் அந்த அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2022இல் வெளியிடப்பெற்றது.